உ

ஸ்ரீராமஜெயம்

கஜலட்சுமிபதிகம்.

இஃது

கும்பகோணத்தைச்சார்ந்த

சாஜிக்கோட்டையிலிருக்கும்

தா. வெங்கட்டராமநாயக்கரவர்கள்

வேண்டுகோளின்படி

தஞ்சைமாநகரம்

ந. வீரபத்திரபிள்ளையால்

இயற்றப்பட்டது.

தஞ்சை-சதாவதானம்

சுப்பிரமணியஐயரது

சென்னபட்டணம்

வித்தியாவர்த்தனிஅச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

விக்கிரமவருஷம் ஆடிமீ.

ஸ்ரீராமசெயம்.

கஜலட்சுமிபதிகம்.

காப்பு

நேரிசைவெண்பா.

மாமேவு மெண்வடிவா மாதுகஜ லட்சுமிக்கோர்
பாமேவு மொண்பதிகம் பாடவே—பூமேவும்
அங்கயத்தின் றுங்கமுகத்தைந்துகரத்தெந்தையிணைப்
பங்கயத்தா ளெம்முளம்வைப் பாம்

பதிகம்.

ஆசிரியவிருத்தம்.

காரேறு முகிலனைய வாரேறு கூந்தலுங்
        கவினேறு திலதநுதலுங்
கதிரேறு புருவமுட னருளேறு விழிகளுங்
        கலையேறு மதிவதனமும்
நேரேறு தோடொளிரு மூசனே ரிருசெவியு
        நிலையேறு குமிழ்நாசியும்
நிகமமுறை யாழ்மொழிக் கனிவாயு மங்கல
        நிறைந்தபூங் கமுகமிடறுங்
தாரேறு தோட்பணையு மொண்மணி வடங்கலவை
        தாங்கிரு சிமிழ்க்கொங்கையுஞ்
சரிகொளிரு கரமுமொட் டியாணநற் பட்டுடைகொள்
        தந்திடையு நூபுரங்கள்
வாரேறு தாள்களு மிலங்குபொன் மேனியொடு
        வந்தெனக் கருள்புரிகுவாய்

மறைநாலு மிகமெச்சு நிறைஞான சுகசத்து
வடிவான கஜலட்சுமியே. (க)

கந்தமரு வம்போ ருகப்போதி ஞ்றையுமெண்
கண்ணனுங் கடல்வண்ணனுங்
கவுரியொரு பாகம்வைத் திடுபவா கனமேறு
கறைமிடற் றனல்வண்ணனும்
மூந்துறு சிருட்டிதிதி சங்கார மெனமொழியு
மூவகைக் கிர்த்தியமுநின்
மொய்ம்புகொடு புரிவரொளி னின்றிரு வருட்பானு
முகநோக்க மென்பாலுறில்
தொந்தமொடு வருவல் வினைப்பனிக் குழுவிலொரு
துளியேனு மெதிர்நிற்குமோ
சுயசில வதிகோல நிதியேல வருள்பால
சுந்தரா நந்திமூல
மந்திர சொரூபிநல் லளகேசன் மாளிகையின்
மன்னுசிங் காரவல்லி
மறைநாலு மிகமெச்சு நிறைஞான சுகசத்து
வடிவான கஜலட்சுமியே. (உ)

அலையுண்டு வனமுண்டு கடலுண்டு பெருவிண்டி
னடைவிண்டு நிசர்வண்ணனும்
...குண்ட நெடுவிண்டி னுரமொன்று செல்விநின்
னருளொன்றும் நிதமொன்றிடில்
நிலையுண்டு புகழுண்டு குணமுண்டு மணமுண்டு
நிதியுண்டு மதியுமுண்டு

நிறையுண்டு பொறையுண்டு சுசியுண்டு சுகமுண்டு
நித்யகை வல்யமுண்டு
கலையுண்டு மெலிவுண்ட விடைமாதர் மயலிற்
கலங்காத மனமுமுண்டாங்
கணமண்டு சிறைவண்டு நறவுண்டு களிகொண்டு
கவிபாடு மலரோதியாய்
மலைவுண்டு திரிவஞ்ச ருளமென்று மருவாத
மாதுமா மணிவிளக்கே
மறைநாலு மிகமெச்சு நிறைஞான சுகசத்து
வடிவான கஜலட்சுமியே. (௫)

கடல்வளையு முலகின்க ணுயர்செல்வி யென்றுநீ
காரணப் பெயர்பூண்டுநின்
கழலிணையை யுன்னுமென் னிடையல்ல லெய்தனின்
கருணைக் கியற்கையாமோ
திடமருவு வாழ்வெனக் கருள்செய்வை யேலுனது
சீர்த்தியிற் குறைவெய்துமோ
சிட்டர்க ளுனைத்தடுத் திடுவரோ வின்னமுஞ்
சிறுவனேன் பரிபக்குவம்
அடையவிலை யோவுனது திருவுளத் தெண்ணமதை
யடியனேற் குரைசெய்குவாய்
அதிநேசி யருள்வாசி யருள்வீசி யொளிர்தேசி
யற்புதாம் பரவிலாசி
மடலவிழ் செழுங்கமல மலர்மனை யகத்துறையு
மங்களா காரவல்லி

மறைநாலு மிகமெச்சு நிறைஞான சுகசத்து
வடிவான கஜலட்சுமியே. (௪)

ஆதியற் புதசிலி யோதுசிற் குண சாலி
யகிலசீ வபரபாலி
அமலரஞ் சிதமேதசி யருளகண் டிதநேசி
யமபுயத் தலரில்வாசி
போதகித் தியவிரி நீதநிட் களவாரி
புண்யசம் பத்குமாரி
பூரணப பிரதாபி காரணச் சுகரூபி
பொய்ம்மைநெஞ் சர்க்கரூபி
ஓதிமத் தெழுஞான வேதனுக் கனியான
வுத்தம புராணிமோன
உருவாகி யருவாகி யொளியாகி வெளியாகி
யோங்குமா தேவியெனவே
மாதவத் தினர்பரவு மாடகத் தரசியே
மைந்தனேற் கின்பமருள்வாய்
மறைநாலு மிகமெச்சு நிறைஞான சுகசத்து
வடிவான கஜலட்சுமியே. (௫)

தாரணியி லுடலெடுத் திதுகாறு மிகுசஞ்
சலத்தினுன் மதிமயங்கிச்
சன்மார்க்க மென்பதை மறந்துதுன் மார்க்கமே
சாதன மெனத்துணிந்தே
[illegible]ணுவு நற்சித்த சுத்தியெய் தாமலிங்
குழல்வுறு ஞ்சிறியனேனை
உனருள் கொடுத்துவெங் கன்மவினை யைத்தடுத்
துய்[illegible]ப்ப தென்றியம்பாய்

சீரணியு மாகமுனைற் புடுபதிக் கவிகைநிசழ்
சித்தசனை யீன்றநாயே
செறியுமல விருளகல வருமமல நிமலிநல
சிற்குணா தீதவல்லி
வாரணி நறுந்துளப மாலையணி மார்பனக
மகிழுமா நந்தமயிலே
மறைநாலு மிகமெச்சு நிறைஞான சுகசத்து
வடிவான கஜலட்சுமியே. (௬)

தன்மக வினிப்பசி சகித்திடே னென்றழுஞ்
சத்தமது கேட்டுநெஞ்சிற்
சற்றீர முற்று தரித்தழைக் காதீன்ற
தாய்பார்த் திருப்பதுண்டோ
நன்மைதரு தாய்தந்தை குருதெய்வ நீயென்று
நம்பியென் குறையெலாமிஞ்
ஞாலமீ துன்பா லுரைத்துநீ கேட்டொன்று
நன்மொழி புகன்றிடாமற்
கன்மனத் தினர்போ லிருப்பதழ கன்றெனைக்
காத்தருள்வ துன்பாரமே
கலைமாது நிலமாது சலமாது மலைமாது
கண்டுமகிழ் செல்வமாதே
வன்மிடி யெனும்பிணிக ளன்பர்பான் மருவாமன்
மாற்றுமுயர் சஞ்சீவியே
மறைநாலு மிகமெச்சு நிறைஞான சுகசத்து
வடிவான கஜலட்சுமியே. (௭)

சின்மயா நந்தபரி பூரணி பரம்பரி
சிதம்பரி யநந்ததேசி
தேவிகரு ணாகரி பராபரி புராதனி
செயந்திக ழகண்டவாசி

நின்மலா காரபர வாகியந் தரிகில
 நித்யகல் யாணசுகுணி
நிட்கள சுதந்தரி நிரந்தரி சவுந்தரி
 நிதானியகி லபரதானி
நன்மனு திதபர சித்தநித் தியமுத்த
 நாதநா தாந்தரூபி
நாரணி யகாரணி மகாமணி சிகாமணிமெய்ஞ்
 ஞானகா ரணியென்னவெ
வன்மையுட னனவரத நின்றிருப் புகழ்பாட
 வரமெனக் கருள்புரிகுவாய்
மறைநாலு மிகமெச்சு நிறைஞான சுகசத்து
 வடிவான கஜலட்சுமியே. (அ)

பாவிக்க வேண்டிலென் மனவாக்கு மாயுமப்
 பாலுமாய் நீநின்றனை
பண்ணினு னின்சீர் படிக்கவெணி னின்மகிமை
 பாரதியு மோதவரிதாஞ்
சேவிக்க வேண்டிலெண் புவனமீ ரேழுநின்
 றிவ்யகரு ணைப்பிரபையாஞ்
சேயனே னெவ்வண்ண நேயமுற் றுன்பாத
 தெரிசனங் காண்பனம்மா
ஆவிக்கு ளாவியாய் மேவிநின் றண்டபகி
 ரண்டமுழு தும்புரக்கும்
அதிகாரி யருண்மாரி பொழிமாரி யரிநாரி
 யமுதசா கரகுமாரி
பாவிக்கி னங்கடைத் தருள்தெய்வ நீயென்னு
 மாமொழியை யானம்பினேன்
மறைநாலு மிகமெச்சு நிறைஞான சுகசத்து
 வடிவான கஜலட்சுமியே. (கூ)

அருமையுய ரா... வ... நருப்பெற்று மீங்கிதற்
    கானநற் பணிபி...ற்று
தனுதின மவத்தொழி...லமைத்தா யுளேக்கழித்
    தயர்வுறு மெனத்தடுத்தே
பெருமையுறு நற்றிரு வருட்கணு ேநாக்கிமெய்ப்
    பெற்றிபுனே முத்...ர்போலப்
பிரியமுட னின்றிருப் புகழ்பாட வைத்தநின்
    பேரருளே யென்சொல்லுவேன்
சருவவொளி கட்குமுத லொளியாகி நின்றிலகு
    சாட்சியே யருளாட்சியே
சத்திக ளனேத்துமரு வுற்றுலகின் மேவுதன
    தானியஞ் சந்தானமும்
வருவீர விசயம துடன்பூமி நல்வித்தை
    மன்னுசௌ பாக்யமெனவே
மறைநாலு மிகமெச்சு நிறைஞான சுகசத்து
    வடிவான கஜலட்சுமியே. (௧௦)

வாழி

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

வேதமுத லாகமங்க ளனேத்தும் வாழி
    மெய்யடியர் குழுவாழி யுலகம் வாழி
ஓதுறுமிப் பதிகமதைக் கற்ருேர் கேட்டோ
    ரோதினவ ரோதமன முற்ருேர் வாழி
மாதவனுர் வாழிவளே யாழி வாழி
    வனமாலை வாழியெழிற் கருடன் வாழி
மாதுகஜ லட்சுமித்தாய் மலர்த்தா ளென்றன்
    மனத்தவிசி லெஞ்ஞான்றும் வாழி வாழி.

கஜலட்சுமிபதிகம் முற்றிற்று.

———:0:———